# நற்றிணையில் தமிழர் வாழ்வியல்

**முனைவர் தி. மணிமொழி**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

நற்றிணை ஒரு தொகை நூல். ஒருவரால் பாடப்பட்டதன்று, பலரால் பாடப்பட்ட பாடநூல்களின் தொகுதி. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களைப் பற்றிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பாடல்கள் ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடிகள் வரையில் உள்ளவை. இந்நூல் தொகுப்பிதோர். பன்னாடு தந்த பாண்டியமாறன் வழுதி. தொகுத்தவர் இன்னவர் என்பது தெரியவில்லை. இந்நூல் அரசியல், பழக்க வழக்கம், பண்பாடு, நம்பிக்கை, மருத்துவம், சோதிடம், வணிகம், தொழில்கள், உடை, இருப்பிடம், கலைகள், இவைகள் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப்புலவர்களின் புலமையினையும், தமிழர்களின வாழ்வியலையும் இந்நூலில் மிகுதியாக காணமுடிகிறது.

### அரசியல்

அரசர் தம் கடமையை அறிந்து நடப்பராயின் அவரது ஆட்சி இன்பந்தரும் குளிர்ந்த நிழலைப் போன்றது என்ற செய்தி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

**“கடன் அறி மன்னர் குடை நிழற் போலப்**
**பெருந் தண்ணென்ற மரநிழல் சிறிது இழிந்து”** (நற்- 146)

மன்னர் எங்ஙனம் குடிகள் வருத்தம் நீங்குமாறு குடைநிழல் கொண்டு காப்பாரோ அங்ஙனம் தலைவியால் நேர்ந்த துயர் நீங்கத் தோழி கருதிட வேண்டும். இதில் அரசரது கடமை கூறப்பட்டுள்ளது. அரசனின் சிறப்பு குறித்த வள்ளுவர்,

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்**
**கிறையென்று வைக்கப் படும்”** (குறள்- 388)

என்று குறிப்பிட்டுள்ளார். நடுவு நிலைமையோடு தன் நாட்டைக் காத்து வரும் ஆட்சியாளன். நாட்டு மக்களால் தெய்வம்(இறை) என்னும் பகழ்நிலையில் வைத்துப் போற்றப்படுவான்.

சோழர் அறம் கெடாது நீதிவழங்கிய செய்தியும் நற்றிணையில் கூறப்பட்டுள்ளது.

**“மறம் கெழு சோழர் உறந்தை அவையத்து**
**அறம் கெட அறியாதாங்கு, சிறந்த”** (நற்-400)

மறம் சிறந்த சோழர்தம் உறையூர்க்கண் அவைக்களத்து அறமானது கெடல் அறியாது, நின்று நிலைப்பெற்றாற்போல் நீதான் சிறந்த நட்புடனே அளாவி என் நெஞ்சில் நின்று நீங்கும் தன்மை இல்லையாய் இருந்தாய் என்று கூறுகிறாள் மருத நிலத்துப் பரத்தை. பரத்தை என்றாலும் அவள் காதலும் உயர்வானதே சோழரின் அறத்தைப்போல என்ற செய்தி இதில் கூறப்பட்டுள்ளது. போர்க்களத்தில் களம் பாடுவாரும் இசைக்கருவியை இசைப்பவர்களும் கூடி இருந்து வெற்றி பெற்ற அரசனை வாழ்த்திப்பாடியதைப் (113) பாடல் கூறுகிறது. தமிழர்கள் அரசியலில் சிறப்பாக இருந்தனர் என்பதை இதன்வழி அறியமுடிகிறது.

### பழக்க வழக்கம்

பண்புடையத் தமிழர்கள் தங்களுக்கென சில பழக்கவழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்தனர். ஆயர் தயிர்த்தாழியின் முடைநாற்றம் நீங்க விளாம்பழத்தை இட்டு வைத்திருந்தது நற்றிணையில் கூறப்பட்டுள்ளது. இதனை

**“விளாம்பழம் கமழும் கமஞ்சூற் குழிசிப்**
**பாசம் தின்ற தேய் கால் மத்தம்”** (நற்- 12)

என்று புலவர் கூறியுள்ளார்.

அக்காலத்தில் மணி அடித்து ஊர்க்காவல் செய்த வழக்கம் இருந்ததை.

**“யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி**
**ஒன்றுஎறி பாணியின் இரட்டும்”** (நற்- 132)

காவலமைந்த வீரர்கள் எழுப்பும் ஒளி பொருந்திய மணியின் ஓசை, தாளத்தில் ஒன்றி அமையும் ஒலிபோல் மாறிமாறி ஒலிக்கும்.

**“நெடுநா ஒள்மணி கடி மனை இரட்ட”** (நற்-40)

காவல் மிக்க அழகிய மனையிடத்தே நீண்ட நாவையுடைய மணி ஒலிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

### இருப்பிடம்

பரதவர் வீடுகள், பனையோலைகளாலும் இலைகளாலும் தழைகளாலும் வேயப்படும்.

**“கழி சூழ் படப்பைக் காண்டவாயில்**
**ஒலி காவோலை முள்மிடை வேலி”** (நற்-38)

தழைத்து முற்றிய பனையோலையோடு முட்களைச் சேர்த்துக் கட்டப்பெற்ற வேலி ஊரைச் சுற்றிலும் இருக்கும். அவ்வேலியகத்தே பனை மரங்கள் உயர்ந்ததும் மணல் மேட்டினை உடைய பக்கம் சூழ்ந்ததும் ஒலி மிக்கதும் ஆகிய ஊர் என்று கூறப்பட்டுள்ளது. இதன்வழி சங்ககால மக்களின் இருப்பிடத்தை அறிய முடிகிறது.

### தொழில்கள்

பழங்காலச் சமூக மக்கள் நாகரிகத்துடன் வாழ்ந்தனர். இவர்களிடம் கூடித்தொழில் செய்தல் வழக்கம் இருந்தது. வேட்டையாடுவதோடு, விளைச்சலில் கிடைத்தவற்றை அவர்கள் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். தம்முள் இணைந்து கூட்டு சமுதாயம் உருவாக வழி வகுத்தனர். பன்றியை வேட்டையாடியதை இப்பாடல் காட்டுகிறது.

**“பிணர்ச் சுவற் பன்றி தோல்முலைப் பிணவோடு**
**கணைக் கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்”** (நற்- 336)

சொரசொரப்பான பிடரியை உடைய ஆண்பன்றி, பெண் பன்றியுடன் சென்று திரண்ட அடிப்பகுதியை உடைய திணைக்கதிரை அளவிறந்து தின்னும். அதனையறிந்த கானவன் பதுங்கி வில்லினால் அம்பெய்து ஆண் பன்றியைக் கொல்வான். கொன்று வந்த இறைச்சியை அவன் மனைவி, சுற்றத்தார் அனைவருக்கும் பகுத்து கொடுத்த செய்தியை நற்றிணை கூறுகிறது. மீன் வேட்டைக்குச் சென்றதையும் நெய்தல் திணைப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

**"வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்ப"** **(நற்-38)**

என்ற வரியின் மூலம் கடலிடத்து மீன்வேட்டை மேற் சென்றவர்க்கு, தப்பாமல் வேட்டை வாய்க்க மழை பொய்க்காமல் பெய்யும் என்று கூறப்பட்டுள்ளது. கிடைத்த மீனைப் பரதவர் பிறநாட்டிற்கு சென்று விற்றதும் கூறப்பட்டுள்ளது.

புன்னை மர நிழலில் இருந்து தேன் மணம் வீசும் தெளிந்த கள்ளைப் பருகிய செய்தியும் கூறப்பட்டுள்ளது. கடலிலேயெ சுறா மீன்களையும் வேறு மீன்களையும் திமிலிலேயே துண்டித்து இறைச்சிகளை நிரப்பிக்கொண்டு கரைக்குவரும் செய்தியும் கூறப்பட்டுள்ளது.

**"துய்த்தலை இறவோடு தொகைமீன் பெற்றியர்**
**வரிவலைப் பரதவர் கருவினைச் சிறாஅர்"** **(நற்-111)**

என்ற பாடல் வரிகள் இதனை விளக்குகின்றன.

அணிகலன் தொழில் செய்வோர் பற்றியும் நற்றிணையில் கூறப்பட்டுள்ளது. கம்மியதில் பொன்செய் கம்மியர், செம்புசெய் கம்மியர் என இருவகைப்படுவர். பொன்செய் கம்மியர் பொன்னை உருக்கி அணிகலன்கள் செய்து தருபவர்கள், பொன் கம்மியர் எனப்படுபவர். இதனை

**"கருங்கால் வேங்கை நாளுறு புதுப்பூப்**
**பொன்செய் கம்மியன் கைவினை கடுப்ப"** **(நற்- 313)**

என்னும் அடிகள் சுட்டும். இவர்கள் பொன்னின் தரத்தை அறிய உரைக்கல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இதனைக் கட்டளைக்கல் எனக் குறிப்பர். பொன்செய் கம்மியர் செய்யும் பொன்னணி தாது அலைந்து வரும் வண்டியின் தோற்றம்போல் இருந்ததை நற்றிணை குறிப்பிடுகிறது.

சலவைத் தொழில் செய்பவர்களைப் புலையர் என்றும் குறித்துள்ளது சங்க இலக்கியம். இவர்களுள் ஆணைப் புலையன் என்றும் பெண்ணைப் புலைத்தி என்றும் குறிப்பிடுவர். இவர்கள் உவர்நிலப் பகுதிகளில் குழிதோண்டி ஆடைகளைப் பசை தோய்த்துச் சலவை செய்ததையும், விழா நாட்களில் அதிகமான ஆடைகளைச் சலவை செய்து கொடுத்ததையும்

**"ஆடுஇயல் விழாவின் அழுங்கல் மூதூர்**
**உடையோர் பான்மையின் பெருங்கை தூவா**
**வறனில் புலத்தி எல்லித் தோய்ந்த**
**பகாப் புகர் கொண்ட புன்பூங்கலிங்கம்"** **(நற்- 90)**

என்னும் பாடலடிகள் உணர்த்தும்

**மருத்துவம்**

மருத்துவன் சங்க இலக்கியத்தில் அறமுடையவனாகப் போற்றப்பட்டு இருக்கிறான். மருத்துவக் குணம் வாய்ந்த மரத்தில் அதன் உறுப்புகள் ஒவ்வொன்றும் மருந்தாகப் பயன்படுவது போல மருத்துவனும் மற்றோர் போற்றும் ஒப்புரவாளனாகக் கருதப்பட்டான்.

**"மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்**
**உரம் சாச் செய்யார் உயர்தவம் வளம்கெட்ட**
**பொன்னும் கொளார் மன்னர்"** **(நற்- 226)**

என்று நற்றிணை குறிப்பிடுகிறது. நோயை ஆராய்ந்து அந்நோய்க்கு தக்க மருந்தையே கொடுத்தான் மருத்துவன்.

**“அரும் பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது**
**மருந்து ஆய்ந்து கொடுத்து அறவோன் போல” (நற்-136)**

என்ற வரிகள் இச்செய்தியைக் குறிப்பிடுகின்றன. தீர்த்தற்கரிய நோயை அடைந்தவர் விரும்பியதைக் கொடாமல் ஆய்ந்து நோய்க்குத் தக்கவாறு மருந்து தரும் அறமுடைய மருத்துவனை ஒப்பவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**சோதிடம்**

எதிர்காலத்தையும், நாட்கோளையும், கணித்துக் கூறுபவர்கள் கணியர்கள். இத்தொழில் மரபே பிற்காலத்தில் சோதிடக்கலை எனப்பட்டது. கோள்களின் மாற்றத்திற்கு ஏற்ப நன்மை, தீமைகளை ஆய்ந்து மக்களுக்கு உணர்த்தியதால் இப்பிரிவினர் சமுதாயத்தில் நிலைகொள்ள உதவியது. கணியன் காலத்தைக் கணித்துக் கூறுவதைப்போல தினை அறுவடைக் காலத்தை வேங்கை அரும்புகள் உணர்த்தவதை,

**“சூருடைச் சிலம்பின் அருவியாடிக்**
**கார் அரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை” (நற்-373)**

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன.

**வணிகம்**

பண்டமாற்று முறையில் பெரும்பாலும் மீனும், உப்புமே மாற்றுதற்குரியதாக இருந்துள்ளன. பரதவர் உப்பை விளைவிப்பவர்களாகவும், உமணர்கள் உப்பை வாங்கிச் சென்று விற்பவராகவும் இலக்கியங்கள் சுட்டியுள்ளன. உமணர்கள் தங்கள் நாட்டில் விளைந்த உப்பினைக் கொடுத்து நெல்லை வாங்கிச் சென்றனர். இச்செய்தியை,

**“தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி” (நற்-183)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. தமிழர்கள் வாணிகத்தின்பொருட்டு வடநாட்டிற்குச் சென்றனர். கங்கையாற்றில் கலத்தில் சென்றனர். நற்றிணையில் கப்பல் ‘வங்கம்’ என்ற சொல்லால் குறிக்கப்படடுள்ளது. இதனை,

**“கங்கை வங்கம் போகுவர்கொல்லோ**
**எவ்வினை செய்வர்கொல் தாமே” (நற்- 189)**

என்னும் அடிகள் சுட்டும்

நற்றிணையில் கடைத்தெரு ‘நியமம்’ எனப்பட்டது.

**‘நெடுங் கொடி நுடங்கும் நியமமூதூர் (நற்-45)**

என்ற வரியில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது.

**உடை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உடை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பிடத்தை விடவும் முதல் தேவையாய் விளங்குவது உடையாகும். மனிதனின் பகுத்தறிவை பயன்படுத்திச் செயல்படத் தொடங்கிய காலம் உடைகள் உடுக்கத் தொடங்கிய காலமாகும். மற்ற உயிர்களின் வாழ்க்கையில்

இல்லாத சிறப்பிற்குரியவை உடைகள். கலிங்கம், பூங்கலிங்கம், முகில், நுண்துகள்கள் அம்துகில் என்பன உயர்நத மெல்லிய ஆடை வகைகள். இவை சங்ககால மக்கள் உடுத்தியருந்ததை நற்றிணைப் பாடல் சுட்டுகிறது.

**"துளங்குஇயல் அசைவர கலிங்கம் துயல்வர"** (நற்-20)
**"புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு"** (நற்-90)
**"துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்"** (நற்-43)
**"அம் துகில் தலையில் துடையினள்"** (நற்-120)
**"வீடுறு நுண் துகில் ஊடு வந்து இமைக்கும்"** (நற்-366)

என்ற பாடல் வரிகள் வழி அறியமுடிகிறது.

பாலை நிலத்து ஆடவர் துவர் ஆடையை உடுத்தியிருந்தனர் என்பதை

**"துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர்"** (நற்-33)

என்ற பாடல் வரி சுட்டுகிறது.

மரநாரால் செய்த உடையையும் உடுத்தியிருந்தனர்.

**"மரல் நார் உடுக்கை மலை உறை குறவர்"** (நற்-64)

மகளிர் தளிர்களையும் பூங்கொத்துகளையும் ஆடையாக உடுத்தியிருந்தனர் இதனை,

**"தளிர் சேர் தண் தழை தைஇ நுந்தை"** (நற்-204)

என்ற பாடல் குறிப்பிடுகிறது. மேலும் நாரை இறகின் மென்மையும் வெண்மையும் வாய்ந்த ஆடைகளும் வழக்கில் இருந்தன.

**"சிறு வெள்ளாங்குருகே சிறு வெள்ளாங்குருகே**
**துறை போகு அறுவைத் தூமடி அன்ன"** (நற்-70)

இப்பாடலின்வழி அறிய முடிகிறது.

**நோன்பு**

நோன்பு என்பது கன்னிப்பெண்கள் கடைபிடிக்கும் விரதம் ஆகும். நோன்பு நாட்களில் அதிகாலை எழுந்து நீராடி சுத்தமான ஆடை அணிந்து அவரவர் விருப்பான கோயிலுக்கு சென்று இறை வழிபாடு செய்வர். திருமணமான பெண்கள்கொண்ட கணவன் என்றும் பிரியாமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வர். நோன்பின் முடிவில் அனைவருக்கும் பொதுவாக ஊர் செழிக்க நாடு செழிக்க தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பொழிய வேண்டும் என்று பெண்கள் வேண்டுகின்றனர். இவை பாவை நோன்பு பற்றிய சிறப்பு ஆகும். இக்கால வழக்கம் போலவே சங்க காலத்திலும் அக்கால மக்கள் தைத்திங்கள் முதல் நாளில் நீராடி நோன்பு மேற்கொண்டனர்.

**"வான் வயல் நனைத்த புறந்த நோன்பியர்**
**கை ஊண் இருக்கையின் தோன்றும் நாடன்"** (நற் - 22)

மழை பெய்ததால் குரங்கின் புறப்பகுதி எல்லாம் நனைந்திருந்தது. இக்காட்சி நோன்பு உடையவர் தைத்திங்களின்போது நீராடி நோன்பு முந்தியிருந்து பின்பு உண்ணுதல்போலத் தோன்றியது என்று கூறப்பட்டுள்ளது.

தைமாதத்தில் நோன்பு இருந்த செய்தி மற்றொரு பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

**"தைஇத் திங்கள் தண் தயம் படியும்"** (நற் - 80)

தைத்திங்களில் குளிர்ந்த நீராடி நோன்பினைத் தலைவி மேற்கொண்டாள். தலைவி பயன் கருதி நோன்பு நோற்றமை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

கடற்கரையில் பலவகைக் கொடிகள் படர்ந்த இடங்களில் அக்கொடிகளை அறுத்து அவ்விடங்களில் நோன்பினைக்கொண்ட மாதர் உறைவது வழக்கம். அவர்கள் 'படிவ மகளிர்' எனப்பட்டனர்.

**"கடல்அம் காக்கைச் செவ்வாய்ச் செவல்**
**படிவ மகளிர் கொடி கொய்து அழித்த"** **(நற் – 272)**

என்ற வரிகளில் இதனை அறியமுடிகிறது.

**மகப்பேறு**

நற்றிணையில் தனிக்குடும்ப அமைப்பு காணப்படுகிறது. மகப்பேறுடன் வாழும் தனிக்குடும்ப அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லற வாழ்வில் மகப்பேறு என்பது மகிழ்ச்சியும் பெருமையும் அளித்ததை அறிய முடிகிறது.

தலைவியின் மகப்பேறு தலைவனுக்கு மட்டுமின்றி அவன் சுற்றத்திற்கே இன்பம் பயந்தது.

**"கடும்புடைக் கடுஞ்சூல் நம்குடிக்கு உதவி**
**நெய்யோடு இமைக்கும் ஐயவித்திரள் காழ்**
**விளங்கு நகர் விளங்கக் கிடந்தோட் குறுகி**
**புதல்வன் ஈன்றெனப் பெயர்த்து"** **(நற்- 370)**

என்ற அடிகளில் தலைவி சுற்றத்தார்கள் சூழ ஓம்புகின்ற சிறந்த சூல் அடைந்து மகவு ஈன்றாள். நெய்யுடன் கலந்து ஒளிருகின்ற சிறுவெண் கடுகாகிய திரண்ட விதைகளை மனையெங்கும் பூசி அயர்ந்து படுக்கையில் படுத்திருந்தாள். அப்போது தலைவன் நீ பெறற்கரிய புதல்வனைப் பெற்றதனால் தாயென்ற வேறாகிய பெயரைப் பெற்றாய் என்கிறான்.

**கலைகள்**

தமிழகத்தில் ஒவியர் இருந்த செய்தி நற்றிணையில் கூறப்பட்டுள்ளது

**"ஓவ மாக்கள் ஒள் அரக்கு ஊட்டிய"** **(நற்-118)**
**"எழுது அழில் உண்கண் பாவை"** **(நற்-177)**
**"ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்"** **(நற்-182)**

என்ற வரிகளில் ஓவியம் குறித்த செய்தி கூறப்பட்டுள்ளது. பாணர், சிறியாழ், பேரியாழ் பயன்படுத்தியமையும் கூறப்பட்டுள்ளது. யாழ் என்பது பண்டைய இசைக்கருவிகளில் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

சங்க காலத்தின் ஆண்கள். பெண்கள் மட்டுமல்லாமல் பாணர், பாடினியர், விறலியர் போன்றோர் பண்ணும் தாளமும் கூடிய இசைப்பாடல்களைப் பண்ணிசைக் கருவிகள், தாள இசைக் கருவிகள் துணையோடு சிறப்பாகப் பாடியுள்ளனர்.

பழந்தமிழர் யாழ், பறை, முரசு, முழவு, கிணை குழல், முதலான இசைக்கருவிகளை இசைத்துள்ளனர்.

**"அரண் தலை மதிலராகவும் முரசு கொண்டு"** **(நற்-39)**

இதில் முரசு பயன்படுத்தியமை கூறப்பட்டுள்ளது.

**"முடிவு இசைப் புணரி எழுதரும்"** **(நற்-67)**

இப்பாடலில் முழவு இசை பயன்படுத்தியமை கூறப்பட்டுள்ளது.

**"கொடுங்கோற் கோவலர் குழலோடு ஒன்றி"** **(நற்-69)**

இதில் குழல் கருவி கூறப்பட்டுள்ளது.

“தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது” (நற்-104)

இசைக்கருவிகள் சங்ககால மக்கள் பயன்படுத்தியமையை நற்றிணை பாடல் வழி அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் பண்டையத் தமிழ் மக்களின் வாழ்க்கைக் கூறுகள், பண்பாடு, அரசியல், நாகரிகம் போன்றவற்றை அறியமுடிகிறது.

தொழில்களாக உப்பு வியாபாரம், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், சலவைசெய்தல், அணிகலன்கள் செய்தல், மருத்துவம், சோதிடம் பார்த்தல் போன்ற தொழில்கள் செய்ததை அறியமுடிகிறது.

நோன்பு பற்றிய நம்பிக்கை இருந்தமையை அறியமுடிகிறது. விருந்தோம்பல் தம் பண்பாட்டின் சிறந்த அம்சமாக தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதையும் அறியலாம்.

கலைகள்மீது ஈடுபாடு இருந்ததை அவர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகளின் வாயிலாக அறியமுடிகிறது. சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியலை ஆராயும்போது அனைத்துத் துறைகளிலும் தமிழர் மேம்பட்டு சிறந்து விளங்கினர் என்பது தெளிவாகிறது.